# பத்திரிக்கைச் செய்தி

## சத்துணவு அமைப்பாளர் மற்றும் சமையலர் பணியிடங்களுக்கு நியமன அறிவிப்பு

## நாகப்பட்டினம் / மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் தகவல்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் செயல்படும் பள்ளி சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 175 **சத்துணவு அமைப்பாளர் மற்றும்** 114 **சமையலர்** காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதியான **"பெண்கள் மட்டும்"** தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் நகராட்சி அலுவலகங்களில் நடைபெறும் நேரடி நேர்முக தேர்வில் கலந்துகொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

மேலும் காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களுக்கு விண்ணபத்தினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து வேலைக்கோரும் பள்ளியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு (ஏதாவது ஒரு மையம் என்று குறிப்பிடக்கூடாது) **24.09.2020 முதல் 30.09.2020 அன்று மாலை 5.00 மணிக்குள்** தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் அலுவலகங்களில் விண்ணப்பிக்க வேண்டும். நேர்முக தேர்வு 12.10.2020 அன்று நடைபெறும். அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் மற்றும் நகராட்சி அலுவலகங்களிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலக விளம்பர பலகைகளிலும் அமைப்பாளர் / சமையலர் காலிப்பணியிட விபரங்களை தெரிந்துகொள்ளலாம்.

### அமைப்பாளர் பணிக்கான தகுதிகள்:

**1.கல்வித் தகுதி:** 1. பொது பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பிரிவினர்களுக்கு 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். **பழங்குடியினர்** 8-ம் வகுப்பு தேர்ச்சி / தேர்ச்சி பெறாதவராக இருக்க வேண்டும். **2.வயது: (I). பொது பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்** ஆகியோருக்கு நேர்முக தேர்வு நடைபெறும் தேதி அன்று 21 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். **(II). பழங்குடியினருக்கு** நேர்முக தேர்வு நடைபெறும் தேதி அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். **(III). விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர்** ஆகியோருக்கு நேர்முக தேர்வு நடைபெறும் தேதி அன்று 20 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். **(IV).** உடல் **ஊனமுற்றோராக** இருப்பின் அந்தந்த இனத்திற்கு மேற்குறிப்பிட்ட குறைந்தபட்ச வயது பூர்த்தி அடைந்தும் 43 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

### சமையலர் பணிக்கான தகுதிகள்:

**1.கல்வித் தகுதி:** பொது பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பிரிவினர்களுக்கு 8-ம் வகுப்பு தேர்ச்சி – தேர்ச்சி பெறாதவராக இருக்க வேண்டும். பழங்குடியினர் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும. **2.வயது: (I). பொது பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்** ஆகியோருக்கு நேர்முக தேர்வு நடைபெறும் தேதி அன்று 21 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். **(II). பழங்குடியினருக்கு** நேர்முக தேர்வு நடைபெறும் தேதி அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். **(III). விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர்** ஆகியோருக்கு நேர்முக தேர்வு நடைபெறும் தேதி அன்று 20 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

**தூரம்: (V).** அனைத்து வகை காலிப்பணியிடத்திற்கும், விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடையில் உள்ள தூரம் 3 கி.மீ.-க்குள் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் கல்வித்தகுதிச்சான்று, குடும்ப அட்டை, இருப்பிடச்சான்று, சாதிச்சான்று, உடல் ஊனமுற்றோருக்கான சான்று, விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டோராக இருப்பின் அதற்கான சான்று, வயது சான்றுக்கான ஆதாரம், வருமானச் சான்று ஆகிய சான்று நகல்களுடன் விண்ணப்பங்களை தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

மாதிரி விண்ணப்ப படிவம், காலிப்பணியிடம் மற்றும் இனசுழற்சி விபரங்கள் தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலக தகவல் பலகை, நகராட்சி அலுவலக தகவல் பலகையில் பார்த்து தெரிந்துக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரர்களுக்கு தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் மூலமாக நேர்காணல் அழைப்பு கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

23/09/20

மாவட்ட ஆட்சித்தலைவர்,
நாகப்பட்டினம்.